**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 08.04.2026</u>**

**OS.173/2021**

**வா.சா. 1 திரு.கிருஷ்ணன்**
**வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**
**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u>**

1) நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு 1, 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். 1, 2 பிரதிவாதிகள் பாட்டி மாரியம்மாள், அந்த மாரியம்மாளின் கணவர் பெயர் வேடியப்பன் என்று பதில் போட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான், ஆனால் குள்ளவேடியப்பன் என்பவர் தான் மாரியம்மாளின் கணவர் பெயர். நான் சொல்லும் எனது தாயார் மாரியம்மாளின் தகப்பனார் பெயர் வேடியப்பனா என்றால் ஆமாம். எனது தாயார் மாரியம்மாளின் தகப்பனார் பெயர் வேடியப்பன் என்பதற்கு ஏதாவது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2) என்னுடைய தாயாரின் அப்பா பெயர் எந்த காலத்திலும் வேடியப்பன் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. 1, 2பிரதிவாதிகளின் பாட்டி மாரியம்மாள் உயிருடன் தான் உள்ளார் அதுபற்றி எனக்கு தெரியாது. 1, 2 பிரதிவாதிகளின் ஊர் நரிப்பள்ளியா அல்லது சிக்களூரா என்றால் நரிப்பள்ளி தான். நரிப்பள்ளிக்கும், தாவா சொத்து உள்ள இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 2 கி.மீ. இருக்கும். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் தாசில்தார் அலுவலகத்தில் வாங்கிய நகல்கள் தான் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 அடங்கல் கணக்கில் மாரியம்மாள்

மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது, மாரியம்மாளின் கணவர் பெயரோ, தந்தை பெயரோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.9 அடங்கல் கணக்கில் வே.மாரியம்மாள் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது, வே.மாரியம்மாளின் கணவர் பெயரோ, தந்தை பெயரோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.12 அடங்கல் கணக்கில் உள்ள பெயர் மாரியப்பன் என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், அது தாலுகா அலுவலகத்தில் கொடுத்தது தான்.

3) தாவா சொத்து சம்பந்தமாக அரூர் RDO அலுவலகத்தில் விசாரணை நடந்தது என்றால் சரிதான். அந்த விசாரணைக்கு நானும் சென்றிருந்தேன் என்றால் சரிதான். RDO விசாரணையின்போது எந்தவிதமான பத்திரமோ, இதர ஆவணங்களோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். RDO விசாரணை செய்துவிட்டு 19.12.2020ல் RDO சிக்களூர் கிராம புல எண்.275/3க்கான பட்டா எண்.407ல் வே.மாரியம்மாள் பெயரில் பட்டா தாக்கல் செய்யலாம் என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான், ஆனால் அவர் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேட சொல்லிவிட்டார். மேற்படி RDO விசாரணையில் வேடியப்பன் மனைவி மாரியம்மாளும் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த மனு கொடுத்த மாரியம்மாளின் பெயரன் சக்திவேலும் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் இல்லை. மேற்படி சக்திவேலும் தனியாக வாக்குமூலம் கொடுத்துள்ளார், அது எனக்கு நேரிட்டு தெரியும், ஆனால் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4) RDO அலுவலகத்தில் வாக்குமூலம் கொடுத்த வே.மாரியம்மாளை இந்த வழக்கின் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி இந்த வழக்கிற்கு அவசியமான தரப்பினரான வே.மாரியம்மாள் தற்போது உயிருடன் உள்ளார், இந்த வழக்கில் அவரையும் தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சக்திவேல் தான் பிரச்சனை செய்கிறார், அதனால் சக்திவேலை சேர்த்துள்ளேன், அதனால் வே.மாரியம்மாளை சேர்க்கவில்லை. தாவா சொத்தான 2 ஏக்கர் 95 சென்ட் 1, 2பிரதிவாதிகளின் பாட்டி வே.மாரியம்மாளுக்கு தான் சொந்தமானது, அந்த வே.மாரியம்மாள் பெயரில் தான் வருவாய்துறை ஆவணங்களும் உள்ளது, அதனால் தாவா சொத்து 1, 2 பிரதிவாதிகளின் பாட்டி வே.மாரியம்மாளுக்கு சொந்தமானது என்பதால் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. வே.மாரியம்மாளும், 1,2 பிரதிவாதிகளும் கூலி வேலைக்காக வெளியூர் சென்றிருந்த சமயத்தில் நான் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்துகொண்டேன் என்று சொன்னால் சரியல்ல, எனது அப்பாவிற்கு பிறகு நாங்கள் தான் கடந்த 20 வருடமாக அனுபவித்து வருகிறோம், அதற்குமுன்பு எனது அப்பா 2006ல் இறந்துவிட்டார். கடந்த 20 வருடமாக நான் தாவா சொத்தை அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளேன், அவ்வாறு அனுபவித்து வருவதாக சொன்னால் தாவா சொத்திற்கு கந்தாயம் கட்டியிருப்பேன், அந்த கந்தாய ரசீதுகள் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள அடங்கல் கணக்கில் நான் 20 வருடமாக அனுபவித்து வருகிறேன் என்பது உண்மையாக இருந்திருந்தால்

அதில் எங்கள் பெயர் தான் வந்திருக்கும், ஆனால் அது 1, 2பிரதிவாதிகளின் பாட்டி பெயரில் உள்ளது என்று சொன்னால் அனுபவத்தில் இருப்பவர்கள் பெயரில் அடங்கல் கணக்கு கொடுக்கமாட்டார்கள், அந்த சர்வே எண் யார் பெயரில் பட்டா உள்ளதோ அவர்கள் பெயருக்கு தான் கொடுப்பார்கள், அந்த மாதிரி தான் அடங்கல்கணக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

5) 1, 2பிரதிவாதிகள் பாட்டி வே.மாரியம்மாள் பாத்தியப்பட்ட சொத்தை எங்களுடைய சொத்து என பொய் சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரில்ல. பொய்யான வழக்கை 1, 2 பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளதால் அவர்களுக்குண்டான செலவுத்தொகையும் நான்கொடுக்க கடமைப்பட்டவர் என்றாலும், இந்த தாவா தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.04.08 15:54:18 +0530